O.S.No.310/2013 – Date : 10.11.2025

DW2 – சுப்ரமணி

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 6 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா சொத்தின் மொத்த விஸ்தீர்ணம் எவ்வளவு என்றால் 23 ஏக்கர் 60 செண்ட் ஆகும். தாவா சொத்துக்கள் 10.06.1960ல் செங்கோட கவுண்டர், முத்து (எ)பெரியாகவுண்டர், நல்லாகவுண்டர் மற்றும் மற்றொரு செங்கோட கவுண்டர் ஆகியோர் சேர்ந்து கூட்டாக வாங்கிய சொத்துக்கள் என்றால் சரி. முத்து(எ)பெரியா கவுண்டர் இறந்துவிட்டார் என்றால் எல்லோருமே இறந்துவிட்டார்கள். முத்து(எ) பெரியாகவுண்டருக்கு, கந்தசாமி, சுப்ரமணி, பழனியப்பன், மற்றும் சின்னமணி(எ)கந்தசாமி ஆகியோர் வாரிசுகள் என்றால் சரி. 6 முதல் 10 பிரதிவாதிகள் முத்து(எ)பெரியாகவுண்டரின் வாரிசுகள் என்றால் சரி. முத்து(எ)பெரியாகவுண்டருக்கு பிரிய வேண்டிய பாகம் 6 முதல் 10 பிரதிவாதிகளுக்கு சேர வேண்டும் என்றால் சரி. 6 முதல் 10 பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதிலுரை பற்றிய சங்கதிகள் தெரியுமா என்றால் தெரியாது.

தாவா 2வது அயிட்ட சொத்து எனது தந்தைக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல, அதில் என்னுடைய சித்தப்பாவிற்கும் பாத்தியம் உள்ளது. அதில் பிரதிவாதிகளுக்கு எந்த பாத்தியமும் இல்லை

என்றால் சரி. தாவா முதல் அயிட்ட சொத்தை பாகம் பிரித்துள்ளதாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாய்மொழியாக நாங்கள் பாகம் பிரித்துக்கொண்டோம். 10.06.1960க்கு பின்னர் தாவா முதல் அயிட்ட சொத்தை பொறுத்து எந்த ஒரு பாகப்பிரிவினையும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. 6 முதல் 10 பிரதிவாதிகளுக்கு பாகம் பிரித்து தர எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் அவர்களுக்குரிய பாகத்தை பிரித்து தர எனக்கு ஆட்சேபனையில்லை.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் பாகம் கோரி தாக்கல் செய்துள்ளார்கள். எத்தனை சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் செங்கோட கவுண்டரின் சொத்துகளுக்காக தாக்கல் செய்துள்ளார்கள். வாதி ராமசாமி வழக்கில் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கு 2 சொத்துக்கள் பொறுத்து தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரி.

முதல் அயிட்ட சொத்து என்பது 10.6.1960ல் அர்த்தனாரி கவுண்டர் செங்கோட கவுண்டர், அர்த்தனாரி கவுண்டரின் மகன் முத்து(எ) பெரியாகவுண்டர், வேலப்ப கவுண்டர் மகன் நல்லாகவுண்டர்,

நல்லிகவுண்டர் மகன் செங்கோட கவுண்டர் ஆகிய நால்வரும் சேர்ந்து விலைக்கு வாங்கியது என்றால் சரி.

அர்த்தனாரி கவுண்டரின் மகன் செங்கோடகவுண்டரின் மகன்கள் இந்த வழக்கின் 1,2 பிரதிவாதிகள் என்றால் சரி. முத்துகவுண்டரின் வாரிசுகள் 11 முதல் 13 பிரதிவாதிகளான வருதாயி, காராமணி என்கிற பழனியப்பன், சுப்ரமணி ஆகியோர் என்றால் சரி. மேற்படி சுப்ரமணி ஆகிய நான் 13ம் பிரதிவாதி என்றால் சரி. காராமணி(எ) பழனியப்பன்–12ம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்றால் சரி. அவருடைய வாரிசுகள் செல்வி, சத்யா, ரம்யா, மணிவண்ணன், பவித்ரா(14 முதல் 18 பிரதிவாதிகள்) என்றால் சரி. 18ம் பிரதிவாதி பவித்ரா இறந்துவிட்டார் என்றால் சரி. அவருடைய வாரிசுகள் 19 முதல் 21 பிரதிவாதிகளான சின்னுசாமி, மைனர் நவீனா, மைனர் விஷ்வாக் என்றால் சரி.

2ம் பிரதிவாதி பழனியப்பன் எனது சித்தப்பா என்றால் சரி. அவருடைய வாரிசுகள் முத்தம்மாள், கந்தசாமி, செல்லமுத்து(எ)ரத்தினம் மற்றொரு முத்தம்மாள்–22 முதல் 25 பிரதிவாதிகள் என்றால் சரி. எனது சித்தப்பாவோ, அவரது வாரிசுகளோ இந்த வழக்கில் கேஸ் நடத்த வரவில்லை என்றால் எல்லாம் நானே நடத்துகிறேன். அவர்கள் வக்கீல் வைத்து வழக்கில் ஆஜராகவில்லை என்றால் சரி. முத்து(எ)பெரியாகவுண்டரின் மகன்கள் செங்குட்டுவேல்,

மற்றும் ராமசாமி என்றால் சரி. அவர்கள் இருவரும் இறந்துவிட்டார்கள் என்றால் சரி. செங்குட்டுவேலின் மகன்கள் கந்தசாமி மற்றும் சுப்ரமணி ஆகிய 6,7 பிரதிவாதிகள் என்றால் சரி. 8 முதல் 10 பிரதிவாதிகள் இறந்த ராமசாமியின் வாரிசுகள் என்றால் சரி. நல்லிகவுண்டர் மகன் செங்கோட கவுண்டரின் மகன்தான் வாதி ராமசாமி என்றால் சரி. 1,2 பிரதிவாதிகளுடன் உடன் பிறந்த சகோதரிகள் பவளாயி, சின்னபிள்ளை, கந்தாயி என்றால் சரி. இந்த பவளாயியின் மகன் வாதி ராமசாமி என்றால் சரி. சின்னபிள்ளையின் மகன்கள் சுப்ரமணி மற்றும் நல்லதம்பி–3,4 பிரதிவாதிகள் என்றால் சரி. 5ம் பிரதிவாதி கந்தாயி என்றால் சரி.

3 முதல் 5 பிரதிவாதிகள் இந்த வழக்கை நடத்தவில்லை என்றால் சரி. 10.6.1960 தேதியிட்ட பத்திரத்தை நான் பார்த்ததுண்டா என்றால் இல்லை. நான் என்ன படித்திருக்கிறேன் என்றால் நான் படிக்கவில்லை. எனது பதிலுரை மற்றும் பிரமாண பத்திரிக்கை ஆகியவற்றை தயார் செய்ய வக்கீலுக்கு யார் தகவல் சொன்னார்கள் என்றால் பழனியப்பனும், நானும் சொன்னேன்.

சொத்தில் எத்தனை சர்வே எண் உள்ளது என்றால் தெரியாது, பார்த்தால் சொல்ல முடியும். நான் என்னென்ன ஆவணங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்று தெரியுமா என்றால் தெரியும். எத்தனை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2

ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி முத்து கவுண்டர் எப்போது இறந்தார் என்றால் 2014ல் இறந்தார்.

தாவா 2வது அயிட்ட சொத்து 20.7.1961ல் எனது தாத்தா செங்கோட கவுண்டர் பெயரில் வாங்கப்பட்ட சொத்து என்றால் சரி. அந்த சொத்தை யாருடன் சேர்ந்து வாங்கினார் என்றால் எஸ்.பி.ராமசாமி என்பவருடன் சேர்ந்து வாங்கினார். எஸ்.பி.ராமசாமி அவரது பங்கை விற்றுவிட்டார் என்றால் சரி. மீதி உள்ள 2வது அயிட்ட நிலம் எனது தாத்தா செங்கோட கவுண்டர் பெயரில் இருந்தது என்றால் சரி.

எனது தாத்தா செங்கோட கவுண்டருக்கு பிறந்த பெண் பிள்ளைகளுக்கு சீர் வரிசை கொடுத்துவிட்டதாகவும் அதனால் அவர்களுக்கு பாகம் கொடுக்கவில்லை என்று எனது பதிலுரை மற்றும் பிரமாண பத்திரிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. எனது பதிலுரை மற்றும் பிரமாண பத்திரிக்கையில் எந்த தேதியில் வாய்மொழி பாகம் பிரிக்கப்பட்டது என்று தேதி சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. எந்த தேதியில் பாகம் பிரிந்ததாக சொல்லி உள்ளேன் என்றால் என்னால் மனப்பாடமாக சொல்லமுடியாது. பாகம் பிரிந்த தேதி குறித்து நான் எந்த இடத்திலும் சொல்லாமல் தற்போது வழக்கிற்காக தேதி சொல்லி உள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

முத்து(எ)பெரியாகவுண்டருக்கு 23.63 செண்ட் நிலத்தில் 6 முதல் 10 பிரதிவாதிகளுக்கு 5 ஏக்கர் 70 செண்ட் நிலம் பாத்தியம் என சொல்லி உள்ளேன் என்றால் சரி.

பி.சா.ஆ.9 ஆவணத்தில் பட்டா எண்.439ல் பெரியாகவுண்டரின் வாரிசுகள் செங்குட்டுவேல், ராமசாமிக்கு 0.2.00 ஹெக்டேர் நிலம் பட்டாவில் காட்டப்பட்டுள்ளது என்றாலும் அதனுடைய அளவு 5 செண்ட் நிலம் என்றால் அது பொய். பெரியாகவுண்டருக்கு பிரிந்த மீதி நிலத்திற்கான பட்டா ஏதாவது ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. நல்லாகவுண்டரின் சொத்தை யார் யாருக்கு விற்கப்பட்டது என்றால் எனது தாத்தா செங்கோடகவுண்டருக்கு ஒரு பகுதியும் நல்லிகவுண்டர் மகன் செங்கோடகவுண்டருக்கு ஒரு பகுதியையும் விற்பனை செய்துள்ளார்கள். 11.6.1972ல் நல்லாகவுண்டரின் வாரிசுகள் சேர்ந்து வாதி ராமசாமிக்குதான் விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

செங்கோட கவுண்டரும் நல்லாகவுண்டரும் சேர்ந்து 05.09.1960ல் எனது தாத்தா செங்கோடகவுண்டருக்கு நிலம் விற்றதாக பி.சா.ஆ.1 ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. அந்த பத்திரத்தில் கண்ட சர்வே எண்கள்.109, 110/6, 111/1, 114/7 ஆன நிலங்களில் எங்களுக்கு பாத்தியப்பட்ட பொதுவில் ¼ பங்கு என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரி. இந்த ஆவணத்தில் எந்த ஒரு

இடத்திலாவது எங்களுக்கு வாய்மொழியாக பாகம் பிரிந்த சொத்துக்கள் என்று எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வாதி தாக்கல் செய்த வில்லங்க சான்றிதழிலில் மேற்படி இந்த ஆவணம் பிரதிபலிக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த கிரய ஆவணப்படி செங்கோடகவுண்டரோ நல்லாகவுண்டரோ முழு சொத்தையும் விற்பனை செய்யவில்லை என்றால் அவர்களது அரை, அரை பங்கை விற்பனை செய்துள்ளார்கள். இந்த சொத்தை எந்த தேதியில் எப்போது யார் யார் பிரித்து கொடுத்தார்கள் என்று பதிலுரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லி உள்ளேனா என்றால் இல்லை. எல்லாம் வாய்மொழி பாகம்தான்.

பி.சா.ஆ.3 பட்டா எனது தந்தை பெயரில் உள்ள ஆவணம் என்றால் சரி. இந்த பட்டாவில் 10.6.1960ல் 4 பேர்கள் வாங்கிய சொத்துக்கள்தான் காட்டப்பட்டுள்ளது என்றால் எனக்குத் தெரியாது. இந்த பட்டாவே நான் எல்லா சொத்திற்கும் சேர்ந்து முத்துகவுண்டர் பெயரில் வாங்கப்பட்டுள்ளதாக கண்டுள்ளது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 ஆவணங்களில் குறிப்பிட்டு வாய்மொழி பாகம் ஏற்பட்டதாக சொல்லப்படவில்லை என்றால் சரி.

யார் யார் முன்னிலையில் வாய்மொழி பாகம் பிரிக்கப்பட்டது என்று வழக்கில் சொல்லி உள்ளேனா என்றால் இல்லை. எனது அத்தைகள் பவளாயி, சின்னபிள்ளை, கந்தாயி ஆகியோரிடமிருந்து

நான் விடுதலைப்பத்திரம் எழுதி வாங்கவில்லை என்றால் சரி. எனது பதிலுரையிலும் பிரமாண வாக்குமூலத்திலும், வீடுகள் கட்டி உள்ளது பற்றி குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரி. யூடிஆர் பட்டா எப்போது வந்தது என்றால் 1984ல் வந்தது. அதற் யார் யார் வந்து அளந்தார்கள் என்றால் தெரியாது. எந்த ஆவணத்தின் அடிப்படையில் அளந்தார்கள் என்றால் எனக்குத் தெரியாது. யூடிஆர் அளவையின்போது பொய்யான தகவலை கொடுத்து என் பெயிரில் பொய்யாக பட்டா வாங்கி விட்டேன் என்றும் அது இந்த வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. தாவா 2 அயிட்ட சொத்தை பொறுத்தும் எந்த ஒரு வாய்மொழி பாகமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

1வது அயிட்ட சொத்திலும் வாதி கோரியபடி அவரது அப்பா செங்கோட கவுண்டரின் பங்கும், அதேபோல் 1,2 அயிட்ட சொத்துக்களில் செங்கோடகவுண்டரின் மகள் பவளாயி வாரிசு என்ற அடிப்படையில் வாதிக்கு பங்குரிமை உள்ளது என்றால் சரியல்ல. எனவே, இதுவரை பாகம் பிரியவில்லை என்றும் வழக்கிற்காக அவர்களது பங்கை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக பொய்யாக வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல. எனவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal District Judge, Salem.